## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

பெறுகைக் கைந்நூலுக்கான
# பிற்சேர்ப்பு - 14

வெளியிடப்பட்ட திகதி – 2007-10-03

**(பண்டங்களும் கட்டுமான வேலைகளும் - 2006 பெறுகை வழிகாட்டு நெறிகளுடன் பயன் படுத்துதல் வேண்டும்.)**

பெறுகை வழிகாட்டு நெறிக் குறிப்பீடு: 8.13.4
ஒப்பந்தங்களுக்கான வேறுபடுத்துகை
**பிரிவுகளை இப்பிற்சேர்ப்பு மேலோங்கி நிற்கும்.**

## தேசியப் பெறுகை முகவர் நிலையம்

## பெறுகை வழிகாட்டு நெறிக் குறிப்பீடு. 8.13.4
## ஒப்பந்தங்களுக்கான வேறுபடுத்துகை

செயற்படுத்துகைக் கூட்டத்தின்போது ஒப்பந்தங்களுக்கான வேறுபடுத்துகை, பெறுகின்ற உருவகத்துக்கும் அரசாங்கத்துக்கும் மிகப் பெரிய சுமையை விளைவிக்கின்றது. வேறுபடுத்துகையிலிருந்து இறுதி ஒப்பந்தப் பணத்தொகை வரையிலான உதவுதொகை உயர்வானதாக இருப்பின், ஒப்பந்தம் அளிக்கப்பட்டபோது நிறைவேற்றப்பட்ட பெறுகைச் செய்முறையை அது முனைப்புக் குறையச் செய்யும்.

ஆதலால், இந்நிலைமையை ஆகக் குறைந்ததாக்குவதற்கு எல்லா உயர் தொழில்சார் மற்றும் மனித முயற்சிகள் எடுக்கப்படுவதனைப் பெறுகின்ற உருவகம் உறுதிப்படுத்துதல் வேண்டும். நோக்கெல்லை மாற்றம், அளவு வேறுபாடுகள் மற்றும் விடுபாடுகள் காரணமாக வேறுபாடுகள் முக்கியமாக தேவைப்படுகின்றன. பிரமாணப் பட்டியல்கள் தயாரிக்கும் சகல தொழில்சார் அலுவலர்களும் பிரமாணப் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ள தொகைகள் இயன்றளவு சரியானதாக இருப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதில் தொகை நேர்த்தியாக்குவதற்கென 5 % கூடாத அளவையே அனுமதித்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ஒப்பந்த விலை அதிகரிப்பை உள்ளடக்கும் நோக்கெல்லை மாற்றம் மீதான வேறுபடுத்துகைக் கட்டளை விடுக்கக் கூடாது. எவ்வாறாயினும், ஏதேனும் தொகைகள் குறைப்பு காரணமாக திரண்ட சேமிப்புகள் மற்றும் ஆரம்பப் பிரமாணப் பட்டியலில் பொருட்கள் நீக்கப்படுதல் என்பனவற்றுக்கு அங்கீகார நடைமுறைகள் பின்பற்றப்படாமல் வேறுபடுத்துகைக் கட்டளைகள் அளிக்கப்படலாம். நோக்கெல்லை மாற்றம் காரணமான வேறுபாடுகளை ஆகக் குறைந்தனவாக்குவதற்கு விலைக் கேள்வி அழைக்கப்படுவதற்கு முன்னர் வடிவமைப்பில் தொடர்புடைய ஆள் / ஆட்களிடமிருந்து அவர்கள் உள்ள பதவியினர் அல்லது வெளிவாரியான அகல் விரிவான சுருக்கக் குறிப்பொன்றைப் பெறுகின்ற உருவகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். நடைமுறைப்படுத்தப்படும்போது நோக்கெல்லை வேறுபாடுகளை ஆகக் குறைந்தளவாக்குவதற்கு இது தேவைப்படுகின்றது.

தொகை வேறுபாடுகள்/விட்டுவிடுகைகள் என்பனவற்றை ஆகக்குறைந்தளவாக்குவதற்கு :

(i) பிரமாணப் பட்டியலில் செம்மையற்ற அளவுகள் அல்லது விட்டுவிடுகைகள் காரணமான வேறுபாடுகளை ஆகக் குறைந்தளவாக்குவதற்கு, விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரிக்க ஆரம்பிக்க முன்னர், இரண்டாம் ஆளொருவர் பிரமாணப் பட்டியலை அதன் செம்மைக்கும் பூரணமான தன்மைக்குமெனச் செவ்வை பார்த்துள்ளாரென பிரமாணப் பட்டியலைத் தயாரித்துள்ள ஆட்களிடமிருந்து பெறுகின்ற உருவகம் சான்றிதழொன்றை பெறுதல் வேண்டும்.

(ii) "வகைக் கட்டமைப்புகள் அல்லது கட்டிடங்கள்" நிர்மாணிக்கப்படும்போது, பிரமாணப் பட்டியலை இறுதியாக்கு முன்னர் அத்தகைய "வகைக்" கட்டமைப்புக்கு அல்லது கட்டிடத்துக்குச் செய்யப்பட்ட இறுதி அளவீடுகளுடன் பிரமாணப் பட்டியலை ஒப்பிடுதல்.

(iii) பிரமாணப் பட்டியலின் செம்மையான தன்மையை அதிகரிப்பதன் பொருட்டு வேறு ஏதேனும் நடைமுறைகளைப் பயன்படுத்துதல்.

### ஒப்பந்தங்களுக்கான வேறுபடுத்துகைகளை அங்கீகரிக்கும் அதிகாரம்

(அ) <u>வேறுபாடுகளின் கூட்டு மொத்தத் தொகை ஒப்பந்தம் அளிக்கப்பட்ட விலையின் 10%</u> க்கு உட்பட்டதாக இருத்தல்

தேவைப்படுமெனின் பின்வரும் விடயங்களுக்கு அமைவாக ஒப்பந்தம் அளிக்கப்பட்ட விலையில் மாற்றம் செய்து திணைக்களத் தலைவர் / கருத்திட்டப் பணிப்பாளர் வேறுபடுத்துகைகளை அங்கீகரிக்கலாம்.

(அ) சம்பந்தப்பட்ட ஆட்களின் விளங்கவைக்கும் குறிப்பொன்று பெற்றுக் கொள்வதன் மூலம்,

(ஆ) திருப்திப்படுத்தலின் மூலம் அதாவது :

(i) ஒப்பந்தம் அளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நோக்கெல்லை மாற்றம் எதிர்நோக்கப்படவில்லை என்பது;

(ii) நோக்கெல்லை மாற்றம் நியாயப்படுத்தக் கூடியதாக இருத்தல் ;

(iii) பிரமாண வேறுபாடு/கள் எல்லைக்குட்பட்டது அல்லது எதிர்நோக்கப்படாத சந்தர்ப்பம் /கள் காரணமாக இருத்தல் ;

<u>இல்லாவிடில்</u>

(இ) கீழே ஆ வின் கீழ் விளக்கமளிக்கப்படும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதன் மூலம்.

(ஆ) **<u>மொத்தத் தொகை ஒப்பந்தம் அளிக்கப்பட்ட விலையின் 10% க்குக் கூடுதலாக இருப்பின்</u>**

(அ) மேலே (அ) மற்றும் (ஆ) வின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூற்றொன்றுடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும் திணைக்களத் தலைவர்/ கருத்திட்டத் தலைவரினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தி.த./ க.த. ஆல் ஒப்பந்தம் அளிக்கப்பட்ட விலையின் வேறுபடுத்துகைக்குத் தேவையான சகல ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) வேறுபடுத்துகைகளின் கூட்டு மொத்தத் தொகை ஒப்பந்தம் அளிக்கப்பட்ட விலையின் 15%க்குள் இருப்பின் மற்றும் தி/ த க.த.ரின் கூற்றுக்குள்மீது பி.க.உ.திருப்திப்படவில்லையாயின், பி.க.உ..அதனை ஒப்பந்த மதிப்பீட்டுக் குழுவின் உதவியுடன் (TEL) உரித்துடைய பெறுகைக் குழுவுக்குச் (P.C) சமர்ப்பித்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் உரித்துடைய கொள்வனவுக் குழு ஒப்பந்த விலையின் அதிகரிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கலாம். அவசியமாக மாற்றம் செய்யப்பட்ட ஒப்பந்த விலைக்குத் தொடர்புடைய பெறுகைக் குழுவாக இருக்கத் தேவையில்லை.